2.2
3)

தொகுதி XII- இதழ் I 2000

# சிந்தனை

ஆசிரியர்.
சோமேசசுந்தரி- கிருஷ்ணகுமார்

கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்,
மார்ச் 2000.
வெளியீடு 2001

# ஈழத்துப் புனைகதைகள் பற்றிய ஆய்வு முயற்சிகள்

கலாநிதி ம. இரகுநாதன்

மேற்குநாட்டவரின் ஆட்சியின் விளைவாக 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவிலும் இலங்கையிலும் ஏற்பட்ட நிலவுடைமை அமைப்பின் சிதைவினாலும் முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் தோற்றத்தினாலும் ஆங்கில ஆட்சியினர் அறிமுகப்படுத்திய ஆங்கிலக்கல்வி, மேலைநாட்டு நவீன இலக்கிய அறிமுகம் முதலிய காரணங்களாலும் தமிழ் இலக்கியப் போக்கில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. இத்தகைய மாற்றங்களின் விளைவாகவே 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நாவல், சிறுகதை ஆகிய இரண்டையும் உள்ளடக்கி நிற்கும் புனைகதை (Fiction) என்னும் இலக்கிய வடிவம் தமிழுக்கு அறிமுகமானது.

தமிழ்மொழியிலே முதன்முதலாக எழுதி வெளியிடப்பட்ட உரைநடை நவீனம் மாயூரம் வேதநாயகம்பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரமே என்பது பொதுவான கருத்தாகும். 1879இல் வெளிவந்த பிரதாப முதலியார் சரித்திரத்தைத் தொடர்ந்து இலங்கையிலும் இம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த வகையில் 1885இல் சித்திலெப்பையினால் வெளியிடப்பட்ட அசன்பேயுடைய கதை என்னும் உரைநடை நவீனமே இலங்கையில் வெளிவந்த முதலாவது தமிழ் நாவலாகும் எனப் பலரும் கருதுவர். ஆனால் இதற்கு முன்னரே காவலப்பன் கதை என்ற மொழிபெயர்ப்பு நாவல் யாழ்ப்பாணத்தில் 1856இல் வெளியிடப்பட்டிருக்கின்றது என்ற செய்தியை திரு.மு. கணபதிப்பிள்ளை கூறுகின்றார்.[1] எனினும் இந்நூல் இதுவரை கிடைக்காததால் இது பற்றி உடனடியாக எதுவும் கூறமுடியாத நிலையே உள்ளது. எவ்வாறாயினும் ஈழத்துத் தமிழ்ப் புனைகதை இலக்கியத்திற்கு சுமார் ஒரு நூற்றாண்டு காலத்திற்கு மேற்பட்ட வரலாறு உண்டு என்பதில் கருத்து வேறுபாட்டிற்கு இடமில்லை.

கடந்த ஒரு நூற்றாண்டு காலத்திற்கு மேலாக ஈழத்தில் எழுதப்பட்டுவந்த புனைகதைகளின் ஆய்வு முயற்சிகள் பற்றி எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஆய்வு வசதிக்காக புனைகதை ஆய்வு முயற்சிகளை பின்வருமாறு வகுத்து நோக்கலாம்.

1. ஈழத்துப் புனைகதை ஆய்வு பற்றிய தனிநூல்கள்.
2. தமிழ்ப் புனைகதை பற்றிய ஆய்வு நூல்களில் காணப்படும் ஈழத்துப் புனைகதைகள் பற்றிய ஆய்வு முயற்சிகள்.
3. இலக்கிய வரலாற்று ஆய்வுடன் ஈழத்துப் புனைகதை ஆய்வு பற்றியும் கூறும் நூல்கள்
4. ஆய்விதழ்களில் வெளிவந்த ஈழத்துப் புனைகதைகள் பற்றிய ஆய்வு முயற்சிகள்.
5. ஆய்வரங்குகளில் படிக்கப்பட்ட ஈழத்துத் தமிழ்ப் புனைகதைகள் பற்றிய ஆய்வுகள்
6. சிறுசஞ்சிகைகள் பத்திரிகைகள் முதலியவற்றில் வெளியான ஈழத்துப் புனைகதை ஆய்வு முயற்சிகள்.
7. ஈழத்துத் தமிழ்ப் புனைகதைகள் பற்றிய பட்டமேற்படிப்பு ஆய்வு முயற்சிகள்.
8. ஈழத்துத் தமிழ்ப்புனைகதைகளுக்கு எழுதப்பட்ட ஆய்வு முன்னுரைகள்.

## 1. ஈழத்துப் புனைகதை ஆய்வுபற்றிய தனிநூல்கள்

ஈழத்துப் புனைகதை ஆய்வு பற்றிய தனிநூல்கள் என்ற வகையில் முதலில் குறிப்பிடப்பட வேண்டியது சில்லையூர் செல்வராஜனின் ஈழத்தில் தமிழ் நாவல் வளர்ச்சி[2] என்னும் சிறு நூலேயாகும். இந்நூலிலுள்ள கட்டுரைகள் 1962இல் எழுதப்பட்டு 1967இல் நூல்வடிவம் பெற்றன.

ஈழத்துத் தமிழ் நாவலின் தோற்றத்தையும் நாளதுவரையிலுள்ள அதன் வளர்ச்சியையும் முழுமையாக ஆராயும் தீவிரமான முயற்சி எதுவும் இதுகாலவரை நடைபெற்றதில்லை எனக்கூறும் செல்வராஜன் ஈழத்துத் தமிழ் நாவல்கள் தோன்றிய நாள்தொட்டு இற்றைவரை அது அடைந்துள்ள மாற்றம் வளர்ச்சி முதலியவற்றை அரசியல், சமூக கலாசார; பொருளாதார காரண காரியத் தொடர்பம்சங்களை முன்வைத்து விமர்சிப்பதற்கு வசதியாக ஈழத்தில் வெளிவந்த நாவல்களின் கையிருப்புக்குக் கணக்கு விபரம் தெரியாத நிலையைச் சுட்டிக்காட்டி, இந்நிலையில் தனது முயற்சியும் விஸ்தாரமான விமர்சனச் சார்பில்லாமல் ஒரு பட்டியல் தொகுப்பைப் போலத் தோன்றக்கூடும் என்கின்றார்.

இவர் 1891இல் வெளிவந்த ஊசோன் பாலந்தை கதை முதல் 1962இல் வெளிவந்ததென்புலோலியூர் செ. நடராஜனின் காலேஜ் காதல்வரை ஏறத்தாள 150 ஈழத்துத் தமிழ் நாவல்கள் பற்றிய விபரத்தைத் தருகின்றார்.

செல்வராஜனின் முயற்சியைத் தொடர்ந்து ஈழத்துப் புனைகதை ஆய்வு தொடர்பாக வெளிவந்த தனிநூல் என்ற வகையில் குறிப்பிடக் கூடியது. நா. சுப்பிரமணியத்தின் ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம் [3] என்னும் நூலாகும். 1970, 72களில் எழுதி 1978இல் வெளியிடப்பட்ட இந்நூல் ஈழத்திலே தமிழ் நாவல் இலக்கியம் தோன்றி வளர்ந்த வகையினை ஆய்வு செய்வதாக அமைகின்றது.

இவர், ஈழத்துத் தமிழ் நாவலின் தோற்றம், சமுதாய சீர்திருத்தக் காலம், எழுத்தார்வக்காலம், சமுதாய விமர்சனக் காலம், பிரதேசங்களை நோக்கி என்ற ஐந்து தலைப்புக்களில் 1885இல் வெளிவந்த அசன்பேயுடைய கதை தொடக்கம் 1977இல் வெளிவந்த ஞானரதனின் புதிய பூமி வரை ஏறத்தாள 450 நாவல்களின் பண்புகளை ஆராய்கின்றார்.

இவர் தனது ஆய்வில் ஈழத்துத் தமிழ் மக்களது சமுதாயப் பிரச்சினைகளைப் பொருளாகக் கொண்டு எழுதப்பட்ட முதல் நாவலாக 1914இல் வெளிவந்த மங்களநாயகம் - தம்பையாவின் நொறுங்குண்ட இருதயம் என்ற நாவலையே குறிப்பிடுகின்றார். மேலும் ஐம்பதுகளில் ஈழத்துத் தமிழ் நாவலுக்கு புதியதொரு பரிமாணத்தைக் கொடுத்து சமூகப் பிரச்சினைகளுக்கான அடிப்படைகளை அணுகித் தீர்வுகூற விழைந்த முதல் நாவலாசிரியராகவும் ஈழத்துத் தமிழ் நாவலுக்கு தேசியச் சாயல் தரமுயன்ற முதல்வராகவும் இளங்கீரனை எடுத்துக் காட்டியுள்ளார்.

1960களின் நடுப்பகுதியிலிருந்து ஏறத்தாழ பதினைந்து ஆண்டுக் காலப்பகுதியில் சமுதாயப் பிரச்சினைகளையே கதைப் பொருளாகக் கொண்டு நாவல்கள் எழுதப்பட்டதாகக் கூறும் நா.சுப்பிரமணியம் இக்காலநாவல்களைப் பொருளடிப்படையில்

1. சாதிப்பிரச்சினை நாவல்கள்
2. அரசியல், பொருளாதாரப் பிரச்சினை நாவல்கள்
3. தோட்டத் தொழிலாளர் பிரச்சினை நாவல்கள்
4. பாலியற் பிரச்சினை நாவல்கள்

என நான்கு பிரிவுகளாகப் பகுத்து ஆய்வு செய்கின்றார்.

நிறைவுரையில், ஈழத்துத் தமிழ் நாவல்களின் பாத்திரப் படைப்பு, மொழிநடை ஆகியவை பற்றிய விரிவான ஆய்வுக்கு இடமுண்டு எனக் கூறியதுடன் அத்தகைய ஆய்வு முயற்சிகள் நடைபெற ஆரம்பித்திருப்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார். மேலும் இவர் தனது நாவலின் பின்னிணைப்பாக ஈழத்துத் தமிழ் நாவல்கள் தொடர்பான விபரப்பட்டியல் ஒன்றையும் இணைத்துள்ளார்.

நா.சுப்பிரமணியம் 1885-1976 வரை வெளிவந்த ஈழத்துத் தமிழ் நாவல்களின் விபரப் பட்டியல்[4] ஒன்றையும், வீரகேசரி பிரசுர நாவல்கள்[5] தொடர்பான பட்டியல் ஒன்றையும் தனித்தனியாக வெளியிட்டுள்ளார். இத்தகைய முயற்சிகளினால் சில்லையூர் செல்வராஜனின் மனக்குறை தீரவாய்ப்பு ஊண்டாகின்றது எனலாம்.

நா. சுப்பிரமணியத்தின் ஆய்வினைத் தொடர்ந்து ஈழத்துப் புனைகதை ஆய்வுபற்றி வெளிவந்த தனிநூல் சி. வன்னியகுலத்தின் ஈழத்துப் புனைகதைகளில் பேச்சுவழக்கு [6] என்பதாகும். நான்கு இயல்களைக் கொண்டு அமைந்துள்ள இந்நூலின் முதலாவது இயலில் இலக்கியத்திற்கும் மொழிக்கும் உள்ள தொடர்பு பற்றியும், பேச்சுமொழியின் முக்கியத்துவம். ஈழத்துப் பேச்சு வழக்கின் பொதுப் பண்புகள், அவை இந்தியப் பேச்சுவழக்குடன் வேறுபடும் தன்மைகள் ஆகியன பற்றி விரிவாக ஆராயப்படுகின்றது. இரண்டாவது. இயலில் ஈழத்துப் புனைகதைகளில் பேச்சு வழக்குக் கையாளப்பட்ட வரலாறு கூறப்பட்டுள்ளது.

மூன்றாவது இயலில் பிரதேசக் கிளை மொழிகள் எவ்வாறு அவ்வப் பிரதேசங்களில் எழுந்த புனைகதைகளிலே கையாளப்பட்டுள்ளன என விபரிக்கப்பட்டுள்ளது. நான்காவது இயலில் எத்தகைய புனைகதைகளுக்கு எத்தகைய கிளைமொழி உபயோகிக்கப்பட வேண்டும் என ஓரளவுக்கு வரையறை செய்ய ஆசிரியர் முனைகின்றார். மேலும் பேச்சு வழக்கினை இலக்கியத்திலே கையாளும்போது எழுத்தாளர்கள் எதிர் நோக்கக்கூடிய பிரச்சினைகளையும் இவர் முன்வைக்கின்றார்.

இந்நூலின் வெளியீட்டுரையில் பேராசிரியர் அ. சண்முகதாஸ். "ஈழத்துப் பேச்சு மொழிபற்றி மொழியியல் விஞ்ஞான அடிப்படையிலே ஏற்கெனவே பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாய்வுகளை மேற்கொண்டவர்கள் தத்தம் பேச்சினை அடிப்படையாகக் கொண்டு அல்லது வெளிக்கள ஆய்விலே தாம்பெற்ற தரவுகளை அடிப்படையாகக் கொண்டே ஈழத்துப் பேச்சு வழக்கினை ஆராய்ந்தனர். ஆனால் ஈழத்து நவீன இலக்கியங்களிலே பிரதிபலித்துள்ள பேச்சு மொழியினை இலக்காக வைத்து எவருமே விரிவான ஆய்வினை மேற்கொள்ளவில்லை. இந்த வகையில் இந்நூல் இத்துறையிலே முதன் முதலாக மேற்கொள்ளப்பட்ட முயற்சியாக அமையும் சிறப்பினைப் பெற்றுள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

## 2. தமிழ்ப் புனைகதை பற்றிய ஆய்வின்போது ஈழத்துத் தமிழ்ப் புனைகதை பற்றியும் கூறும் நூல்கள்

1954இல் வீரகேசரிப் பத்திரிகையின் ஞாயிறு இதழில் 'தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற தலைப்பில் க. கைலாசபதி கட்டுரைத் தொடர் ஒன்றினை எழுதியிருந்தார். எனினும் இவர் இக்கட்டுரையில் ஈழத்துத் தமிழ் நாவல்கள் பற்றி விரிவாக எதையும் குறிப்பிடவில்லை. 1925 இல் நீலகண்டன் அல்லது ஓர் சாதி வேளாளன் என்ற நாவலை எழுதிய இடைக்காடர்வரை அறிவியற் போதனையைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தனர் என்றும் இடைக்காடர் நீதிபுகட்டும் முது மொழிகளையே அத்தியாயத் தலைப்புக்களாகக் கொண்டார் என்றும் மட்டுமே இவர் கூறிச்செல்கிறார்.. ஆனால் இத் தொடர் கட்டுரைகள் 1968இல் நூல் வடிவம் பெற்றபோது நூலின் இறுதியில் இயற்பண்பும் யதார்த்த வாதமும் என்ற தலைப்பில் இளங்கீரனின் நீதியே நீகேள், செ. கணேசலிங்கனின் செவ்வானம் ஆகிய இரு ஈழத்து நாவல்கள் மேற்படி பண்புகளுக்கு உதாரணமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.[7]

தமிழ்நாட்டில் நாவலிலக்கியத்தின் ஏற்ற இறக்கங்களை யொட்டியே ஈழத்துத் தமிழ் நாவலும் வளர்ந்தது. எனக் கூறும் க. கைலாசபதி 1950ஆம் ஆண்டிற்குப் பின்னர் சுதந்திரமடைந்த ஒரு நாட்டிற்குரிய பிரத்தியேகப் பிரச்சினைகள் மெல்ல மெல்லத் தலை தூக்கின, தேசியம், ஜனநாயகம் முதலிய கோட்பாடுகள் தொழிற்படத் தொடங்கின, என்றும் இதனைத் தொடர்ந்து 1956ஆம் ஆண்டின் பின்னர் சோஷலிச இயக்கம் வேகம் பெற்றது என்றும் குறிப்பிட்டுள்ளார். இம்மாற்றப் போக்கு இந்தியாவிலும் நிகழ்ந்ததாயினும் தமிழிலக்கியத்தைப் பொறுத்தவரையில் ஈழத்தில் இது நாவல், சிறுகதை, கவிதை முதலிய துறைகளில் பிரதிபலித்த அளவுக்குத் தமிழகத்தில் இடம்பெறவில்லை என்கின்றார்.

க. கைலாசபதியின் கட்டுரைகள் நூலாக வெளிவருவதற்கு முன்னர் 1967இல் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் கட்டுரைத் தொகுதியொன்று தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் [8] என்ற தலைப்பில் வெளிவந்தது. தமிழ் இலக்கியத்தினுள் சிறுகதை வளர்ந்து இணைந்த முறைமையினை அதாவது தமிழ்ச் சிறுகதையின் முழுமையான வளர்ச்சியைக் கூறமுற்படும் இந்நூலில் அம்முழுமையான வளர்ச்சியில் இலங்கை எழுத்தாளர் பெறும் இடத்தினை நிர்ணயிக்கும் பொருட்டு இலங்கையில் தமிழ்ச் சிறுகதை பற்றியும் ஆராய்கின்றது. இந்த ஆய்வினூடாக 1930 தொடக்கம் சிறுகதை ஈழத்தில் உருவப் பிரக்ஞையுடன் எழுதப்படலாயிற்று: சி.வைத்திலிங்கம் ', இலங்கையர்கோன். சம்பந்தன் ஆகிய முதல் மூவரது முயற்சியாலும் இலங்கை சிறுகதைத்துறையில் தமிழ்நாட்டுடன் இணைக்கப் பெற்றது. எனக்கூறப்பட்டுள்ளது. மேலும் 1940 - 1945ஆம் ஆண்டு வரை முக்கிய இலக்கிய நிறுவனமாக விளங்கிய மறுமலர்ச்சிக்குழு ஈழத்துச் சிறுகதைகள் ஈழத்துப் பிரச்சினைகளைப் பற்றியனவாக இருத்தல் வேண்டும். என்னும் மரபை உண்டாக்கியது என்றும் 1956இல் இலங்கையில் நடைபெற்ற சமூகப் புரட்சியுடன் தேசிய விழிப்புணர்வு நாடெங்கும் பரவியது என்றும் இக்காலத்திலேயே சிறுகதை தோன்றக்கூடிய சமுதாய மாற்ற நிலை இலங்கைத் தமிழ் மக்களிடையே ஏற்பட்டது. என்றும் இதனைத் தொடர்ந்து தேசிய இலக்கியக் கோட்பாடு தோற்றம் பெற்றதையும் இலங்கை எழுத்தாளர்கள் தமிழ்

நாட்டிலும் கணிக்கப் பெற்றனர் என்றும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 1960க்குப் பின்னர் பழமைவாதிகளால் சிறுகதை இழிசினர் இலக்கியமெனக் கூறப்பட்டதையும் முற்போக்கு அணியினர் இதற்கு எதிராக யதார்த்த வாதத்தை முன்வைத்ததையும் எடுத்துக்கூறி எவ்வாறாயினும் இலங்கையில் சிறுகதை பூரணப்பட்ட ஓர் இலக்கிய வடிவாக வளர்ந்துள்ளது என்ற கருத்தும் இந்நூலில் முன்வைக்கப்பட்டுள்ளது.

1977இல் பெ. கோ. சுந்தரராஜனும் சோ.சிவபாத சுந்தரமும் இணைந்து தமிழ் நாவல் நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும் என்ற நூலை வெளியிட்டனர். [9] இந்நூலில் அசன்பேயுடைய கதையிலிருந்து அருள் சுப்பிரமணியத்தின் நான் கெடமாட்டேன் என்ற நாவல் வரையிலான ஈழத்துப் படைப்புக்கள் ஆராயப்படுகின்றன. 1973இல் வெளியான அவர்களுக்கு வயது வந்துவிட்டது. என்ற நாவல் ஈழத்து நாவல் இலக்கியத்துக்குப் பெருமைதருவதோடு ஈழத்துத் தமிழ் நாவலுக்கும் 'வயது வந்துவிட்டது என்பதற்குச் சான்றாக விளங்குகின்றது என்றும் அருள் சுப்பிரமணியம் அ.பாலமனோகரன் மற்றும் இவர்களுக்கு முன்னோடிகளாயிருந்த இளங்கீரன், தேவன், செங்கை ஆழியான், செ. கணேசலிங்கன், எஸ். பொன்னுத்துரை போன்றவர்கள் நாவல்துறைக்கு ஆற்றியுள்ள பணியை அளவிட்டுப் பார்க்கும்போது தமிழ் நாவலின் எதிர்கால வளர்ச்சிக்கு ஈழத்திலிருந்து கணிசமான பங்கு கிடைக்குமென்று தெரிகின்றது என்றும் கூறியுள்ளனர்.

இந்நூலினையடுத்து 1978இல் கா. சிவத்தம்பியின் மற்றொரு நூலான நாவலும் வாழ்க்கையும் என்ற நூல் வெளிவந்தது.[10] இந்நூலில் நாவலின் சமூகவியற் பண்புகள் என்ற கட்டுரையில் யாழ்ப்பாணத்து நிலவுடைமை அமைப்பின் தன்மைகள் எடுத்துக் கூறப்படுகின்றன. மேலும் இலங்கையில் எழுந்த நாவல்கள் வரலாற்று நிலைப்பட்ட சமூக பொருளாதார அரசியல் இயக்கங்களின் பிரதிபலிப்பாக அமைவதாகக்கூறும் கா. சிவத்தம்பி அசன்பேயுடைய கதையிலிருந்து அருள் சுப்பிரமணியம் முதலியோரின் நாவல்கள் வரை அவற்றினூடே காணப்படும் பொருள் மரபினை மட்டிடும்போது இந்த உண்மை புலனாகும் என்று கூறுகின்றார். நூலின் ஆய்வு நோக்கம் வேறாகையால் ஈழத்துத் தமிழ் நாவல்கள் பற்றிய விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை.

1980 இல் "தமிழ் நாவல்களில் மனித உரிமைகளும் மக்கள் போராட்டமும் என்ற நூலை தி.பாக்கியமுத்து பதிப்பித்திருந்தார். [11] இந்நூலில் பேராசிரியர் க. கைலாசபதியின் முன்னுரையுடன் தமிழ் நாவல்கள் பற்றிய எட்டுக் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இதில் ஈழத்து எழுத்துக்களில் மனித உரிமைகளும் மக்கள் போராட்டங்களும் என்ற கட்டுரையொன்றினை ஆர். எஸ். சுகிர்தராஜா எழுதியுள்ளார். இவர் செ. யோகநாதன் செங்கை ஆழியான், டானியல் ஆகியோரின் ஒரு சில படைப்புக்களை மையமாகக் கொண்டு மேற்கொண்ட ஆய்வின் விளைவாக 'பொழுது போக்கிற்காக எழுதப்படும் இந்த நாவல்களில் ஆழமான இலட்சியத் தெளிவை எதிர்பார்ப்பதில் பயனில்லை..... இன்றைய சமுதாயத்தைக் கசக்கிப் பிழியும் பிரச்சினைகளை இவர்கள் இனங்கண்டுகொண்டது பாராட்டத்தக்கதாயினும் அவைகளை இந்த எழுத்தாளர்கள் அணுகிய முறையில் ஒரு கூர்த்த அரசியல், பொருளாதார சமூகப் பார்வை இல்லை, அவைகளைச் சரியான முறையில் எடுத்துச் சொல்லத் துணிவு இல்லை" என்ற கருத்தை முன்வைத்துள்ளார்.

க. கைலாசபதியின் நீண்ட முன்னுரையில் தமிழ் நாவலின் வளர்ச்சி எடுத்துக் கூறப்படுகின்றது. ஏற்ற இடங்களில் ஈழத்துத் தமிழ் நாவல்களும் தொட்டுக் காட்டப்பட்டுள்ளன.

1980 இல் பெ. கோ. சுந்தரராஜனும் சோ. சிவபாதசுந்தரமும் இணைந்து தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும் என்ற நூலை வெளியிட்டனர். [12] இந்நூலில் "ஈழத்தில் தளர்ச்சி" என்ற தலைப்பில் கைலாசபதி, துரை மனோகரன் முதலியோரின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு எழுபதுகள் வரை ஈழத்தில் சிறுகதைத்துறையில் வளர்ச்சி குன்றி இருந்ததை எடுத்துக் காட்டியுள்ளனர். அத்துடன் 1958இல் ஆரம்பித்து 1971, 1977, 1983 ஆகிய ஆண்டுகளில் ஈழத்தில் பரவிய இனக்கலவரத்தீ கடைசி நாள்களில் பிரளயமாகித் தமிழினமே அந்த நாட்டில் அழிக்கப்படும் நிலையில் இலக்கியத்துக்கு மாத்திரம் விடிவுகாலம் எப்போது என்று ஈழத்தமிழர் ஏங்குகின்றனர். என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

## 3. இலக்கிய ஆய்வின் ஒரு பகுதியாக இடம்பெறும் ஈழத்துப் புனைகதை ஆய்வு முயற்சிகள்

ஈழத்துத் தமிழலக்கிய வளர்ச்சி பற்றி எழுதிய ஆய்வாளர்கள் சிலர் ஈழத்துப் புனைகதை வளர்ச்சி பற்றியும் எழுதியுள்ளார்கள். இந்த

வகையில் முதலில் குறிப்பிடத்தக்கது. 1964இல் வெளிவந்த கனக செந்திநாதனின் ஈழத்து இலக்கிய வளர்ச்சி என்னும் நூலாகும். [13] இதன் கண் ஈழத்து இலக்கிய முயற்சிகளினதும் அவற்றின் வளர்ச்சிகளினதுமான வரலாற்றை எழுதியுள்ளேன். முயற்சிகள் நடைபெறுவதற்கான பின்னணியைச் சரித்திர நோக்குடனேயே அணுகியுள்ளேன்.

ஆனால், இலக்கிய வளர்ச்சியின் சரிதத்தைச் சொல்லும் அளவிற்கு மட்டுமே எழுத்தாளர்களுடைய சிருட்டிகளைப் பற்றிய விமர்சனம் இந்நூலில் இடம்பெறுகின்றது. விரிவான விமர்சன முறையைப் பிரக்ஞை பூர்வமாகவே தவிர்த்துள்ளேன் எனக்கூறும் கனக. செந்திநாதன் 1922-1960கள் வரை ஈழத்து இலக்கிய வளர்ச்சியினை ஒவ்வொரு காலகட்டங்களாக வகுத்து நோக்கியுள்ளார்.

1941-50 காலகட்டத்தில் சிறுகதை முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டதை எடுத்துக்காட்டி நவீன சிறுகதை உத்திகளைக் கொண்ட கவர்ச்சிகரமான படைப்புக்களைப் படைத்து ஈழத்துச் சிறுகதைத்துறைக்கு வழிவகுத்த முதல்வர் என்று சி. வைத்திலிங்கத்தைக் குறிப்பிடுகின்றார். மேலும் இவர்களின் படைப்புக்களை மதிப்பிடுவதற்கு மேல்நாட்டு விமர்சன அளவுகோல்கள் பொருத்தமானவையல்ல என்பதும் இவரது கருத்தாகும்.

1951- 60 காலகட்டத்தில் சிறுகதைத் துறையில் பெருமளவு முயற்சிகள் நடைபெற்றதை எடுத்துக் காட்டியதுடன் கதை சொல்லும் உத்திமுறைகளிலே பலவிதப்பட்ட பரிசோதனைகள் நடத்தப்பட்டதையும் குறிப்பிட்டுள்ளார்.

நாவல்கள் என்ற தலைப்பில், ஈழத்திலே நாவல் இலக்கிய முயற்சிகள் மிகவும்குறைவானது எனக் கூறுவதுடன் ஈழத்து நாவல்கள் பொதுப்படையாக சாய்வு நாற்காலியில் இருந்துகொண்டு, பொழுபோக்குக்காக வாசிப்போருக்கு ஏற்றவையாகவே இருக்கின்றன. மனித சமூகத்தின் அடிப்படை உணர்ச்சிகளையும் எழுச்சிகளையும் இன்ப துன்பங்களையும் பிரதிபலிப்பனவாக அவை அமையவில்லை என்ற கருத்தையும் முன்வைத்துள்ளார்.

1977 இல் அ. சண்முகதாஸ் பதிப்பித்த ஆக்க இலக்கியமும் அறிவியலும் [14] என்ற நூலில் இடம்பெறுகின்ற சிலகட்டுரைகளில் ஈழத்துப் புனைகதைகள் பற்றிய கருத்துக்களும் இடம்பெறுகின்றன. எடுத்துக்காட்டாக: ஆக்க இலக்கியமும் மொழியியலும் என்ற கட்டுரையில் அ. சண்முகதாஸ், இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து ஈழத்து ஆக்க இலக்கியங்களில் மக்கள் தமிழ் இடம்பிடித்துக்கொண்டு வருவதை எடுத்துக் கூறியதுடன் இன்று ஈழத்து ஆக்க இலக்கியகாரர் மொழியை எப்படி உபயோகிக்க வேண்டும் என்று சிந்திக்க வேண்டியதன் அவசியத்தினை சில படைப்புக்களில் காணப்படும் மொழிப்பிரயோக வழுக்களைச் சுட்டிக்காட்டி விளக்கியுள்ளார்.

ஆக்க இலக்கியமும் பாலியலும் என்ற கட்டுரையில் என். கே. ரகுநாதன் ஈழத்து முற்போக்கு எழுத்தாளர்களில் பிரபலமான ஒருவரான டானியலின் படைப்புக்களில் ஆபாசத்தன்மை இருப்பதை எடுத்துக் கூறி அளவுக்கு மிஞ்சிய பழிவாங்கும் உணர்ச்சிதான் இதற்குக் காரணம் என்று கருதவேண்டியுள்ளதாகவும் கூறியுள்ளார்.

1978 இல் கா. சிவத்தம்பியின் ஈழத்தில் தமிழ் இலக்கியம் என்ற நூல் வெளிவந்தது. [15] இந்நூலில் ஈழத்து ஆக்க இலக்கிய முயற்சிகள் பற்றியும் முற்போக்கு இலக்கியத்தின் தோற்றம் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

1979இல் சி.மௌனகுரு, மௌ. சித்திரலேகா, எம்.ஏ.நு.்மான் ஆகியோர் இணைந்து இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம் என்ற நூலை வெளியிட்டனர். [16] இந்நூலில் ஈழத்து நாவல், சிறுகதை ஆகியவற்றின் வளர்ச்சி பற்றிய தனித்தனிக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. 1970கள் வரையிலான புனைகதை வளர்ச்சியினை இக்கட்டுரைகளில் காணலாம்.

1982இல் எஸ். சிவலிங்கராஜாவும் மயிலங்கூடலூர் பி. நடராசனும் இணைந்து பதிப்பித்த தமிழியற் கட்டுரைகள் [17] என்ற தொகுப்பு நூலில் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள் என்ற தலைப்பில் கலாநிதி க.அருணாசலத்தின் கட்டுரையும் ஈழத்துத்தமிழ் நாவல் என்ற தலைப்பில் நா. சுப்பிரமணியத்தின் கட்டுரையும் இடம்பெற்றுள்ளன. 1960கள் வரையான ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றினைக் கூறும். க.அருணாசலம் "தமிழ்நாட்டு எழுத்தாளர்களைவிட இலங்கை எழுத்தாளர்களின் பொருளாதாரக் கண்ணோட்டதின் எதார்த்தநிலை மிக ஆழமானது நுணுக்காமானது என்று சொல்லலாம். இலங்கை

எழுத்தாளர்களின் தனித்தன்மையே சமுதாயப் பார்வைதான்" எனத் தமிழ்நாட்டுத் திறனாய்வாளர் ஒருவர் கூறியதை எடுத்துக்காட்டித் தனது கட்டுரையினை முடித்துள்ளார்.

ஈழத்துத் தமிழ் நாவல் பற்றி எழுதிய நா. சுப்பிரமணியம் தனது ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம் என்ற நூலில் கூறப்பட்ட கருத்துக்களை அடியொற்றியே இக்கட்டுரையினை எழுதியுள்ளார். கட்டுரையின் இறுதியில் அண்மைக்காலத்தில் தீவிரமடைந்துள்ள (சிங்கள - தமிழ்) இன உணர்வும் அதன் சமகால விளைவுகளும் தமிழ் நாவலுக்குப் பொருளாகத் தொடங்கியுள்ளன என்பதை எடுத்துக்காட்டி இவ்வகை நாவல்கள் ஈழத்துத் தமிழ் நாவலின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கான திசையை உணர்த்தி நிற்கின்றன என்று கொள்ளலாம். எனக் குறிப்பிட்டுள்ளார்.

1984இல் வெளிவந்த மு.தளைய சிங்கத்தின் ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி [18] என்னும் நூலில் 1956-1963 வரையுள்ள காலப்பகுதியில் இயங்கிய ஈழத்துத் தமிழ் இலக்கியப் போக்குகளை - சமூக - பொருளாதார-அரசியல் வரலாற்றுப் பின்னணிகளுடன் ஆராயப்படுகின்றது (இந்நூலிலுள்ள கட்டுரைகள் திரு. ஆர். எம் நாகலிங்கம் என்பவரை ஆசிரியராகக் கொண்டு கண்டியிலிருந்து சில ஆண்டுகள் வெளிவந்த செய்தி என்ற பத்திரிகையில் 26-01-1964 முதல் 17-01-1965 வரையிலான ஓராண்டு காலம் வாராவாரம் வெளிவந்ததாக இந்நூலின் முன்னுரையில் இருந்து அறிய முடிகின்றது புனைகதைகள் பற்றி நேரடியாக ஆய்வு செய்யப்படாவிடினும் அவற்றின் பின்னணிகளை விளக்கும் வகையில் இந்நூல் முக்கியத்துவமுடையதொன்றாகும்.

1987இல் வெளிவந்த எம். ஏ.நு.'.மானின் மார்க்சியமும் இலக்கியத் திறனாய்வும் [19] என்ற நூலில் ரகுநாதனின் பஞ்சும் பசியும், இளங்கீரனின் நீதியே நீகேள், கணேசலிங்கனின் செவ்வானம் முதலிய நாவல்களை யதார்த்தவாத நாவல்களுக்கு உதாரணமாகக் காட்டிய கைலாசபதியின் கருத்து மறுக்கப்படுகின்றது.

1974இல் கே. எஸ் சிவகுமாரன் எழுதிய Tamil writing in Sri Lanka என்னும் நூலிலும் தமிழ்ப் புனைகதைகள் பற்றிய சில குறிப்புக்கள் இடம்பெறுகின்றன. இவர் ஈழத்துத் தமிழ் நாவல்கள் பற்றிய சில அறிமுகக் குறிப்புக்களை அவ்வப்போது பத்திரிகைகளில் எழுதி வந்துள்ளார். இக்குறிப்புரைகளின் தொகுதியொன்று அண்மையில் நூலாக வெளிவந்துள்ளது.[20]

## 4. ஆய்விதழ்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட வெளியீடான சிந்தனை ஆய்விதழில் மௌ. சித்திரலேகா ஈழத்துத் தமிழ் நாவல்களில் சமுதாய உணர்வின் தோற்றம் என்ற தலைப்பில் கட்டுரை எழுதியுள்ளார்.[21] மனோன்மணி சண்முகதாஸ் பெண்களும் தமிழ் நாவலும் என்ற கட்டுரையில் ஈழத்து நாவல்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். [22] ம. இரகுநாதன் நடையியல் நோக்கில் ஈழத்து நாவல்களான நிலக்கிளி- காட்டாறு ஆகியவற்றை ஒப்பிட்டு ஆய்வு செய்துள்ளார். [23]. இவரின் மற்றொரு கட்டுரை செங்கை ஆழியானின் நாவல்களில் வரும் உரையாடல்களின் மொழிபற்றி ஆராய்கின்றது.[24]

ம.இரகுநாதன் யாழ்ப்பாணத்துப் புனைகதைகளில் சைவம் என்ற தலைப்பில் தமிழ்நாடு தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற ஆறாவது அனைத்துலக சைவ மாநாட்டில் வாசித்த கட்டுரையின் சுருக்கம் ஆய்வுச் சுருக்க இதழில் வெளியாகியுள்ளது.[25]

## 5. ஆய்வரங்குகள்

1977இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற தமிழ் நாவல் நூற்றாண்டுவிழா ஆய்வரங்கில் ஈழத்துத் தமிழ் நாவலின் தோற்றம் பற்றி. ஆ. சிவநேசச்செல்வனும், ஈழத்து நாவல்கள்-ஒரு பொதுமதிப்பீடு என்ற தலைப்பில் சி.தில்லைநாதனும், ஈழத்துத் தமிழ் நாவல்களின் மொழிபற்றி எம்.ஏ.நு.'.மானும் ஈழத்து நாவல்களின் வளர்ச்சிக் கட்டங்கள் பற்றி மௌ. சித்திரலேகாவும் கட்டுரைகள் வாசித்தனர். இவை நூல்வடிவம் பெறவில்லை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1976இல் நடைபெற்ற தென்னாசியவியல் கருத்தரங்கில் 1970க்குப் பின் ஈழத்துத் தமிழ் நாவல்கள் பற்றி. ' நா. சுப்பிரமணியமும்[26] யாழ்ப்பாணப் பிரதேச நாவல்கள் பற்றி துரை மனோகரனும் [27]. வாசித்த கட்டுரைகள் சிந்தனை இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ் மன்றம் நடாத்தும் டானியல் நினைவு ஆய்வரங்கில் த.

கலாமணி, நா.சுப்பிரமணியம், க. தணிகாசலம், செங்கை ஆழியான், ம.இரகுநாதன் ஆகியோர் டானியலைப் பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்துள்ளனர். இவ்வாய்வுகள் நூல்வடிவம் பெறவில்லை.

## 6. பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளியான ஆய்வுகள்.

பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் காலத்திற்குக் காலம் ஈழத்துப் புனைகதைகள் பற்றிய ஆய்வுகள் வெளிவந்திருக்கின்றன. இவை பெரும்பாலும் அறிமுகக் குறிப்புக்களாகவே அமைந்துள்ளன. ஒருசில கட்டுரைகள் கதைப்பண்பு, நாவல் வளர்ச்சி, மொழி என்பன தொடர்பாகவும் வெளிவந்துள்ளன.

## 7. பட்டமேற்படிப்பு ஆய்வுகள்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்திற்காக க. அருணாசலம் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள் பற்றி ஆய்வு செய்துள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் திருமதி.மௌ. சித்திரலேகா இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் தேசியவாதம் (1830-1930) என்ற பொருளிலும் துரை மனோகரன் ஈழத்துத் தமிழ் நாவல்களில் கதைத் தலைவன் பாத்திரப் படைப்பு என்ற பொருளிலும் திருமதி .வி.வேலுதாசன் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் சமூகப் பெறுமானங்கள் (1970-90) என்ற பொருளிலும் ஆய்வு செய்துள்ளனர். இவை நூல்வடிவம் பெறவில்லை.

## 8. ஆய்வு முன்னுரைகள்

1980 களின் தொடக்கத்திலிருந்து ஈழத்தில் ஏற்பட்ட அரசியல், சமூகப் பிரச்சினைகளால் இலக்கிய வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனால் புனைகதைகளும் பாதிக்கப்பட்டன. புனைகதைகளுக்கான ஆய்வு முயற்சிகளும் பாதிக்கப்பட்டன. இத் தேக்க நிலையினால் இக்காலத்தில் புனைகதை ஆய்வு முயற்சிகள் புனைகதைகளின் முன்னுரைகளாக, திறனாய்வுரைகளாக வெளிவந்தன. எடுத்துக்காட்டாக சோமகாந்தனின் விடிவெள்ளி பூத்தது (1989) தெணியானின் மரக்கொக்கு (1994) ரஞ்சகுமாரின் மோகவாசல் முதலிய புனைகதைகளுக்கு பேராசிரியர் கா.சிவத்தம்பி எழுதிய முன்னுரைகள் இக்கால ஈழத்துத் தமிழ்ப் புனைகதைகளின் போக்கை எடுத்துக்காட்டுவனவாக அமைந்துள்ளன.

## முடிவுரை

ஈழத்திலே புனைகதைகள் தோன்றி ஒரு நூற்றாண்டைக் கடந்துவிட்டாலும் புனைகதைகள் பற்றிய ஆய்வு முயற்சிகள் விரிவான அளவில் மேற்கொள்ளப்படவில்லை. ஆரம்பத்தில் புனைகதைகளின் அறிமுகக் குறிப்புக்களாக ஆரம்பித்த ஆய்வு முயற்சி பின்பு சமூக வரலாற்றுப் பின்னணி, உள்ளார்ந்த பண்பு, மொழிநடை ஆகியவை பற்றிய ஆய்வாக வளர்ச்சியடைந்திருந்தாலும் விரிவான தனி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். ஆய்வு வசதிகளுக்கு ஏற்ற சூழல் - பிரசுர வசதிக்குறைவு முதலிய காரணங்களால் இத்தேக்க நிலை உருவாகியிருக்கலாம். எனினும் பாரபட்சமற்ற ஆய்வு முயற்சிகளின் மூலமே காத்திரமான புனைகதைகள் உருவாகமுடியும் என்பதால் புனைகதை ஆய்வாளர்கள் தமது பணியைத் திறம்பட மேற்கொள்ளவேண்டியது அவசியமாகும்.

## அடிக்குறிப்புக்கள்

| | |
|---|---|
| 1. கணபதிப்பிள்ளை, மு. | ஈழநாட்டின் தமிழ்ச்சுடர் மணிகள் 1967, பாரிநிலையம், சென்னை |
| 2. சில்லையூர் செல்வராஜன் | ஈழத்தில் தமிழ் நாவல் வளர்ச்சி, 1967, சென்னை |
| 3. சுப்பிரமணியம், நா | ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம், ஜூன் 1978, யாழ்ப்பாணம் |
| 4 ............... | ஈழத்துத் தமிழ் நாவல்களின் நூல் விபரப் பட்டியல், 1978, யாழ்ப்பாணம் |
| 5 ............... | வீரகேசரி பிரசுர நாவல்கள், 1980, யாழ்ப்பாணம். |
| 6. வன்னியகுலசிங்கம், சி., | ஈழத்துப் புனைகதைகளில் பேச்சுவழக்கு, 1986, யாழ்ப்பாணம். |
| 7. கைலாசபதி, க. | தமிழ் நாவல் இலக்கியம், 1968, சென்னை. |
| 8. சிவத்தம்பி, கா., | தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், 1967, சென்னை. |
| 9. சுந்தரராஜன், பெ.கோ, சிவபாதசுந்தரம், சோ., | தமிழ் நாவல்-நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும் 1977, சென்னை. |
| 10. சிவத்தம்பி, கா., | நாவலும் வாழ்க்கையும், 1978, சென்னை. |
| 11. பாக்கியமுத்து,தி., (பதிப்பாசிரியர்) | தமிழ் நாவல்களில் மனித உரிமைகளும் மக்கள் போராட்டமும், 1980, சென்னை. |
| 12. சுந்தரராஜன், பெ.கோ. சிவபாதசுந்தரம், சோ., | தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும், 1989, சென்னை. |
| 13. செந்திநாதன், கனக., | ஈழத்து இலக்கிய வளர்ச்சி, 1964, கொழும்பு. |
| 14. சண்முகதாஸ், அ., (பதிப்பாசிரியர்) | ஆக்க இலக்கியமும் அறிவியலும், 1977, யாழ்ப்பாணம். |
| 15. சிவத்தம்பி, க. | ஈழத்தில் தமிழ் இலக்கியம், 1978, சென்னை. |
| 16. மௌனகுரு. சி., சித்திரலேகா, மௌ., நு.்மான், எம்.ஏ., | இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத்தமிழ் இலக்கியம், 1979, கல்முனை, .இலங்கை. |
| 17. சிவலிங்கராஜா, எஸ், நடராஜன், பி., (பதிப்பாசிரியர்கள்) | தமிழியற் கட்டுரைகள், 1982, யாழ்ப்பாணம். |
| 18. தளையசிங்கம், மு., | ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி, 1984, சென்னை. |

19. நு.்.மான், எம்.ஏ, மார்க்சியமும் இலக்கியத் திறனாய்வும், 1987 சிவகங்கை, தமிழ்நாடு.

20. ................................. ஈழத்து தமிழ் நாவல்களிற் சில திறனாய்வுக் குறிப்புகள்., 1999, கொழும்பு.

21. சித்திரலேகா, மௌ., ஈழத்துத் தமிழ் நாவல்களில் சமுதாய உணர்வின் தோற்றமும், சிந்தனை, தொகுதி 1, இதழ் 1, 1976, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழப்பாணம்.

22. மனோன்மணி சண்முகதாஸ்., பெண்களும் தமிழ் நாவலும், சிந்தனை, 1976, மேலது.

23. இரகுநாதன், ம., நடையியல் நோக்கில் நிலக்கிளி - காட்டாறு ஒப்பாய்வு, சிந்தனை, தொகுதி,IV இதழ் I,II1994., மேலது.

24. ................................. செங்கை ஆழியானின் நாவல்களில் வரும் உரையாடல்களின் மொழிபற்றிய சில குறிப்புக்கள், சிந்தனை, இதழ்III 1994.

25. ................................. யாழ்ப்பாணத்துப் புனைகதைகளில் சைவம், ஆறாம் உலகச் சைவமாநாடு, ஆய்வுச் சுருக்கம், 1997, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

26. சுப்பிரமணியம், நா. 1970 க்குப் பின் ஈழத்துத் தமிழ் நாவல்கள், சிந்தனை, தொகுதி I, இதழ், 1976.

27. மனோகரன், துரை, யாழ்ப்பாணப் பிரதேச நாவல்கள், சிந்தனை 1976, மேலது.

## பின்னிணைப்பு

பத்திரிகைகளிலும் சிறு சஞ்சிகைகளிலும் வெளியான ஈழத்துப் புனைகதை ஆய்வு முயற்சிகள் பற்றிய விபரங்கள்.

1. செ. கணேசலிங்கனின் செவ்வானம்.- அரங்கராஜன், தாமரை, 1969.

2. ஈழத்தில் சிறுகதை வளர்ச்சி -க.கைலாசபதி, இளங்கதிர், 1962 பேராதனை.

3. நொறுங்குண்ட இருதயம் கதையும் கதைப்பண்பும் - ஆ. சிவநேசச் செல்வன், பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றாண்டு விழா மலர், 1972, தெல்லிப்பழை.

4. பஞ்சமர் புதிய நாவல் -பெருமாள், குமரன் 18, டிசம்பர் 1978, கொழும்பு.

5. காலங்கள் சாவதில்லை. தெளிவத்தை ஜோசெப், குமரன் 41, 1974, கொழும்பு.

6. காலங்கள் சாவதில்லை. -யுவன், தாயகம், இதழ் 5., கார்த்திகை 1974, யாழ்ப்பாணம்.

7. 1970களுக்குப் பின் ஈழத்துத் தமிழ் நாவல்கள் செ.யோகராசா, அலை, 1975, கார்த்திகை, யாழ்ப்பாணம்.

8. இலங்கையர்கோனும் வழக்குத் தமிழும் — சு. இராஜநாயகன், மல்லிகை, நவம்பர் 1975.

9. அ.நாகலிங்கம்பிள்ளை- ஈழத்து நாவலாசிரியர் — -ம.சண்முகதாஸ், மல்லிகை 93, 1976 மார்ச்.

10. முப்பதுகளில் சிறந்த நாவலாசிரியர் — கலா. பரமேஸ்வரன், மல்லிகை 104, 1976 மார்ச்.

11. ஈழத்து மண்ணின் முதல் நாவல், சி.வை.சின்னப்பபிள்ளையின் வீரசிங்கன் கதை. — நா..சுப்பிரமணியம், மல்லிகை 105, ஜனவரி 1977.

12. அழகவல்லி — -கனக.செந்திநாதன், மல்லிகை 106, பெப்ரவரி 1977.

13. கடந்த கால்நூற்றாண்டுக்கால ஈழத்துத் தமிழ் நாவல் வளர்ச்சி — -துரை மனோகரன், மல்லிகை 106, பெப்ரவரி,1977

14. தமிழ் நாவலும் தத்துவமும் — - ம.சண்முகதாஸ், மல்லிகை 106, 1977.

15. ஒருகூடைக் கொழுந்து - சில குறிப்புக்கள் — - அந்தனி ஜீவா, மல்லிகை 112, 1981.

16. ஈழத்துச் சிறுகதைத்துறையில் மலையகத்தின் பங்களிப்பு — மாத்தளை கார்த்திகேசு, மல்லிகை 152, 1981.

17. 1983 ஆம் ஆண்டு ஈழத்துப் புனைகதைகள் — ச. முருகானந்தன், மல்லிகை, பெப்ரவரி, 1984.

18. நாளை- நாவல் மதிப்பீடு — - சி.தில்லைநாதன், மல்லிகை, பெப்ரவரி, 1984.

19. டானியலின் படைப்புக்களில் பேச்சுமொழி — அ.சண்முகதாஸ், தமிழோசை, 1987. தமிழ்மன்றம், யாழ். பல்கலைக்கழகம்.

20 1978க்குப் பின் ஈழத்தின் தமிழ் நாவலிலக்கியம் — - நா. சுப்பிரமணியன், மல்லிகை, யூன், யூலை 1988.`

21. நானும் எனது நாவல்களும் — செங்கை ஆழியான், மல்லிகை, செப்ரம்பர், ஒக்ரோபர் 1989 முதல்

## பத்திரிகைகள்


1. தமிழில் வெளிவந்த முதலாவது சரித்திர நாவல் மோகனாங்கி -சோ.சிவபாதசுந்தரம், தினகரன், 1972, கொழும்பு.

2. பஞ்சப்பட்ட மக்களின் வாழ்வைச் சித்திரிக்கும் பேரோவியம் - க. கைலாசபதி, தினகரன், 1972.

3. அசன்பே கதைக்கோர் அறிமுகம். -கமாலுதீன், தினகரன், 1974.

4. வ.அ.இராசரத்தினம் எழுதிய கிரௌஞ்சப் பறவைகள் - குணசிங்கம், வீரகேசரி, 1976. கொழும்பு.

5. போராளிகள் காத்திருக்கின்றனர். -அ.சண்முகதாஸ், வீரகேசரி, 1976.

6. ஆரம்பகால நாவல்களில் சமுதாய நோக்கம் -கலா பரமேஸ்வரன், தினகரன் 1976.